## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

அரசு தரப்பு சாட்சி 5(LW3) வாக்குமூலம்

## சிறப்பு வழக்கு எண். 7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கோவிந்தன் | வட்டம் | - | |
| த/பெ | - | நாராயணன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 08.11.2023, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்)

### முதல் விசாரணை

நான் தற்போது துத்திப்பட்டு கிராமத்தில் வசித்துவருகிறேன். இறந்துபோன குப்பனை எனக்கு தெரியும். என் அண்ணன் மகன் ஆவார். எனக்கு நிலம் இருக்கிறது. நிலம் துத்திப்பட்டு கிராமத்தில் இருக்கிறது. குப்பனுக்கு நிலம் துத்திப்பட்டு கிராமத்தில் உள்ளது. குப்பன் நிலத்திற்கு அருகில் சுப்பிரமணியன் நிலம், ஏழுமலை நிலம், கோவிந்தன் நிலம், தாமோதிரன் நிலத்திற்கு அருகில் குப்பன் நிலம் உள்ளது. அதன் நடுவில் வரப்பு போகிறது. அதன் வழியாக தான் நான் என் நிலத்திற்கு போவேன். குப்பனும் அந்த வழியாக தான் போகவேண்டும். 3 வருடத்திற்கு முன்பு நாள் மாதம் தெரியாது. நான் காலையில் பால் கரப்பதற்கு போனேன். அப்போது மணி 5 இருக்கும். குப்பன் எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது. 6 மணி இருக்கும் போது வரப்பை தாண்டி போகும் போது எனக்கு மின்சாரம் வலது காலில் தாக்கிவிட்டது. அப்போது நான் பக்கத்து நிலத்துகாரர்களை கூப்பிட்டேன் அவர்கள் வந்தார்கள். குப்பன்

இறந்துகிடந்ததை அவர்கள் பார்த்தார்கள் ஆனால் நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அரசுத்தரப்பில் அனுமதி வேண்டப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

27.10.2020ல் காலை 5.30 மணிக்கு நான் வரப்பு வழியாக போகும் போது குறிப்பாக குப்பன், கோவிந்தன் மற்றும் சுப்பிரமணியம் நிலத்திற்கு நடுவில் குப்பன் நெற்பயிர் செய்த வரப்பின் குறுக்கே யாரோ கட்டுக்கம்பிகளை கொண்டு கட்டப்பட்டு அதில் அருகில் இருந்த மின் கம்பத்திலிருந்து ஒயர் மூலம் மின்சாரம் செலுத்தியுள்ளனர். அதை நான் கவனிக்காமல் காலையில் எனது நிலத்து பக்கம் இருந்து குப்பன் நிலத்து பக்கம் வரும் போது எனக்கு மின்சாரம தாக்கியதால் நான் சுதாரித்துக்கொண்டு என்னவென்று பார்த்த போது அங்கு குப்பன் கவிழ்ந்த நிலையில் வரப்பின் மீது கடந்தான் நான் பார்த்தேன் என்றால் சரிதான். நான் சத்தம்போட்டு பக்கத்தில் உள்ளவர்களை அழைத்தேன் என்றால் சரிதான். அவர்கள் வந்து அந்த லைனை எடுத்துவிட்டு குப்பனை பார்த்த போது அவர் இறந்துகிடந்தது தெரியவந்தது என்றால் சரிதான். பிறகு அவர் மனைவி நிர்மலாவிற்கு நான் தகவல் சொன்னேனா என்றால் இல்லை. அங்கு இருந்தவர்கள் தெரியபடுத்தினார்கள். எனது வயோதிகம் காரணமாக தவறாக குப்பன் இறந்ததை அங்கு பார்க்கவில்லை என்று முதல் விசாரணையில் சொன்னேன் என்றால் எனக்கு காது சரியாக கேட்பதில்லை.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

குப்பன் இறந்ததை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

அரசு தரப்பு சாட்சி 6(LW4) வாக்குமூலம்

## சிறப்பு வழக்கு எண். 7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ஏழுமலை | வட்டம் | - | |
| த/பெ | - | காசிநாதன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 08.11.2023, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்)

## முதல் விசாரணை

நான் தற்போது துத்திப்பட்டு கிராமத்தில் குடியிருக்கிறேன். இறந்துபோன குப்பன் தெரியும். அவர் என் அண்ணன். அவர் மனைவி பெயர் நிர்மலா. குப்பனுக்கு நிலம் உள்ளது. அவருக்கு 1 ஏக்கர் நிலமும் எனக்கு 1 ஏக்கர் நிலமும் உள்ளது. இரண்டும் பக்கம் பக்கம் உள்ளது. எனது நிலத்திற்கு பக்கத்தில் சுப்பிரமணி நிலம், சித்தப்பா கோவிந்தன் நிலம், ரமேஷ் நிலம் அதை தாண்டி தாமோதரன் நிலம் உள்ளது. நிலத்திற்கு போவதற்கு வழி சுப்பிரமணி நிலத்திற்கும் என் அண்ணன் குப்பன் நிலத்திற்கும் நடுவில் ஒரு பாதை உள்ளது. அந்த பாதை வழியாக தான் அனைவரும் செல்வோம். தற்போது என் அண்ணன் உயிரோடு இல்லை. 3 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். எனக்கு செல்வதுரை என்பவர் காலை 5, 5.30க்கு போன் செய்து என் அண்ணன் இறந்தவிவரத்தை சொன்னார். நான் ஊர்காரர்களை அழைத்துக்கொண்டு அங்கு சென்றேன். நான் சென்று பார்த்தபோது சுப்பிரமணி நிலத்திற்கும் என் அண்ணன் நிலத்திற்கும்

குச்சிக்கட்டி மின்சாரம் இழுத்திருந்தார்கள். அதில் என் அண்ணன் கவிழ்ந்த நிலையில் மின்சாரம் தாக்கி இறந்துகிடந்தார். ஊர்காரர்கள் உதவியோடு அந்த மின்சார லைனை அனைத்துவிட்டு என் அண்ணனை துாக்கி பார்த்தார்கள். இரண்டு முட்டியிலும் காயம் இருந்தது. அதற்கு பிறகு காவல் நிலையம் வந்து பிரேதத்தை எடுத்து சென்றார்கள். நீதிமன்றத்திலா் என்னிடம் காட்டப்படும் குச்சி தான் நிலத்திற்கு இடையே நட்டுவைக்கப்பட்டிருந்தது. அது ஏற்கனவே சாபொ3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சிகப்புநிற காப்பர் ஒயர் தான் அங்கு சம்பவ இடத்திலிருந்தது. அது சாபொ1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கட்டுக்கம்பி குறுக்கே கட்டபட்டிருந்தது அது ஏற்கனவே சாபொ2 ஆக குறியீடு செய்யப்பட்டள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை அன்று விசாரித்த பிறகு இன்றுவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 27ம் தேதி தான் என்னை விசாரித்தார்கள். சான்றுபொருட்களை போலிசார் உடலை எடுத்தபின்பு அதை கைப்பற்றினார்கள். அதை பற்றி நான் போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அண்ணன் எவ்வாறு இறந்தார் என்று எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். செல்லதுரை சொன்ன பின்புதான் நான் ஊர்காரர்களை அழைத்து சென்றேன். சான்றுபொருட்கள் அனைத்தும் போலிசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள்.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.